மாகாணக் கல்வித் திணைக்களம் சப்ரகமுவ - வாராந்த பாடசாலை

வாரம் – 12 (10th Jan - 16th Jan 2021

பாடம் - வரலாறு

தரம் - 10

துயாரிப்பு – திருமதி ஜெ. கோபிகா
கே/ தெஹி/ தேஹியோவிற்ற த. ம. வி.

Department of Education,Sabaragamuwa Province/ Weekly School Department of Education,Sabaragamuwa Province/ Weekly School

## பகுதி – 1

**சுருக்கமாக விடை தருக**

1. போர்த்துக்கேய நாடுகாண் பயணியான வாஸ்கோடகாமா இந்தியாவை வந்தடைந்த ஆண்டு எது?
2. இலங்கைக்கு வந்த முதலாவது ஐரோப்பிய நாட்டவர் யார்?
3. அவர் வந்த ஆண்டு எது? வந்து இறங்கிய இடம் எது?
4. போர்த்துக்கேயர் இலங்கையின் கரையோரங்களை ஆட்சி செய்த காலம் எது?
5. போர்த்துக்கேயர் இலங்கை வந்த போது இலங்கையின் அரசியல் பிரிவுகள் எவை? அதனை ஆட்சி செய்த அரசர்கள் யார்?
6. போர்த்துக்கேயரின் உதவியை நாடிய முதல் இலங்கை அரசன் யார்?
7. 7ம் விஜயபாகு கொலை செய்யப்பட்ட ஆண்டு எது?
8. விஜயபாகு கொலையின் பின்னர் கோட்டை இராச்சியம் எத்தனையாக பிளவுபட்டது? அவை எவை?
9. புவனேகபாகு மன்னன் மரணம் அடைந்த ஆண்டு எது?
10. புவனேகபாகு மன்னனின் மரணத்திற்கு பின்னர் கோட்டை இராச்சியத்தின் மன்னன் ஆகியவன் யார் ?
11. தர்மபால மன்னன் எவ்வாறு கோட்டையின் மன்னன் ஆகினான்?
12. சீதாவாக்கை இராச்சியத்தினுடைய முதலாவது மன்னன் யார் ? அவனுடைய மகன் யார்?
13. முல்லேரியா யுத்தம் யார் யாருக்கு இடையில் இடம்பெற்றது?
14. முல்லேரியா போர் இடம்பெற்ற ஆண்டு எது?
15. மல்வானை ஒப்பந்தம் யார் யாருக்கு இடையில் இடம்பெற்றது?
16. யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிய போர்த்துக்கேய தளபதி யார்?
17. யாழ்ப்பாணத்தில் கத்தோலிக்க சமயத்தை பரப்புவதற்கு எதிராக செயற்பட்ட மன்னன் யார்?

18. மாயாதுன்னை போர்த்துக்கேயருடன் சண்டை இடுவதற்காக அவனுக்கு உதவிய மன்னன் எந்த நாட்டைச் சேர்ந்தவன்?
19. முதலாம் இராஜசிங்கன் கண்டி இராச்சியத்தை கைப்பற்றுவதற்கு உதவியாக இருந்த நிர்வாகியின் பெயர் என்ன?
20. முதலாம் இராஜசிங்கன் கண்டியை கைப்பற்றும் போது கண்டியின் ஆட்சியாளனாக விளங்கியவன் யார்?
21. முதலாம் இராஜசிங்கனின் படையெடுப்பின்போது போர்த்துக்கேயரின் உதவியை நாடிய நபர்கள் யாவர்?
22. அவர்களுடைய கத்தோலிக்க பெயர்களைக் குறிப்பிடுக?
23. பின்வரும் ஆண்டுகளில் இடம்பெற்ற யுத்தங்களின் பெயர்களை குறிப்பிட்டு அதற்குத் தலைமை தாங்கிய போர்த்துக்கேய தளபதிகளின் பெயர்களை குறிப்பிடுக.
    1. 1594
    2. 1602
    3. 1630
    4. 1638
24. 1638 ஆம் ஆண்டு உடன்படிக்கை யார் யாருக்கு இடையில் ஏற்பட்டது?
25. 1766 ஆம் ஆண்டு செய்து கொள்ளப்பட்டசமாதான உடன்படிக்கை யார் யாருக்கு இடையில் மேற்கொள்ளப்பட்டது?

**பகுதி – 2**

**1. (அ) கீழே (1)இல் குறிப்பிடப்பட்டுள்ள எல்லா வரலாற்று இடங்களையும் தரப்பட்டுள்ள இலங்கைப்படத்திலும்**

**(ஆ) கீழே (11)இல் குறிப்பிடப்பட்டுள்ள எல்லா வரலாற்று இடங்களையும் தரப்பட்டுள்ள உலகப்படத்திலும் குறித்துப் பெயரிடுக.**

I. கற்பிட்டி, பலன, சீத்தாவாக்கை, கோட்டை, ஹெமன்ஹயில், பெட்றிக்கோட்டை, அங்குருவா தொட்ட, றைகம, பண்டுவஸ்நுவர, பிபிலிகம, மல்வானை, கன்னொருவ
II. பாரசீகம், சீனா, செங்கடல், எகிப்து, மத்தியதரைக்கடல், கொன்ஸ்தாந்திநோபிள்

**பகுதி - 2**

**2.** 1) பின்வரும் கூற்றுகளுடன் தொடர்புடைய நபர்களின் பெயர்களை குறிப்பிடுக.
A – கண்டி இராச்சியத்திற்கு எதிரான ரந்தெனிவல போரில் தலைமை வகித்த போர்த்துக்கேய தளபதி
B – போர்த்துக்கேயர் இலங்கை வரும் போது கோட்டை ஆட்சியாளன்
C– வீரசுந்தரபண்டாரவை பொறிக்கிடங்கில் வீழ்த்திக்கொன்ற சீத்தாவாக்கை ஆட்சியாளன்.

2) பின்வரும் மன்னர்கள் ஆட்சிக்கு வரும் முன்னர் வழங்கப்பட்ட இயற்பெயர்களை குறிப்பிடுக.

A – 1ம் விமலதர்மசூரியன்

B – 1ம் இராஜசிங்கன்

C – 2ம் இராஜசிங்கன்

D – ஶ்ரீ விக்ரமராஜ சிங்கன்

3) கோட்டை இராச்சியத்தின் லீழ்ச்சிக்கு ஏதுவான தொன்யுவான் தர்மபாலனின் செயற்பாடுகளை இரண்டு உதாரணங்களின் துணையுடன் விளக்குக.

4) போர்த்துக்கேயர் இலங்கையை கைப்பற்றியதன் நோக்கங்கள் மூன்றினை குறிப்பிடுக.

**3.** 1) யாழ்ப்பாண இராச்சியம் தொடர்பில் பின்வரும் வினாக்களுக்கு விடை தருக

A - போர்த்துக்கேயர் இலங்கை வரும் போது யாழ்ப்பாண ஆட்சியாளன்

B - யாழ்ப்பாண இராச்சியத்தில் கத்தோலிக்க சமயத்தை பரப்புவதற்கு எதிராக செயற்பட்ட மன்னன்

C - யாழ்ப்பாணத்தை கைப்பற்றிய போர்த்துக்கேய தளபதி

2) போர்த்துக்கேய தளபதிகள் நான்கு பேரின் பெயர்களை குறிப்பிடுக

3) விஜயபாகு கொள்ளையின் விளைவுகள் இரண்டினை சுருக்கமாக விளக்குக

4) இலங்கையில் போர்த்துக்கேயர் ஆட்சியினால் ஏற்பட்ட விளைவுகளை மூன்று காரணிகளின் துணையுடன் விளக்குக.

**4.** 1) கண்டி இராசதானி தொடர்பில் பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

A - கண்டி இராச்சியத்தின் முதல் மன்னன்

B - கண்டியை மிக நீண்ட காலம் ஆட்சி செய்த மன்னன்

C - 1602 ஆம் ஆண்டு முதலாம் விமலதர்மசூரியன் மன்னனை சந்தித்த ஒல்லாந்து தூதுவன்

2) பின்வரும் சம்பவங்களுடன் தொடர்புடைய ஆண்டுகளை குறிப்பிடுக

A - புவனேகபாகு மன்னன் மரணித்த ஆண்டு எது?

B - மாயாதுன்னை மன்னன் இறந்த ஆண்டு எது?

C - சங்கிலி மன்னன் யாழ்ப்பாணத்தின் ஆட்சியாளராக பொறுப்பேற்ற ஆண்டு எது?

D - யாழ்ப்பாண இராச்சியம் கைப்பற்றப்பட்ட ஆண்டு எது?

3) சீதாவாக்கை இராச்சியத்தின் வீழ்ச்சிக்கு ஏதுவான காரணிகள் இரண்டைக் குறிப்பிடுக

4) போர்த்துக்கேயர் மற்றும் ஒல்லாந்தர் கண்டி இராச்சியத்தை கைப்பற்ற முடியாமைக்கான காரணிகள் மூன்றை குறிப்பிட்டு விளக்குக.

**5)**

1) இலங்கைக்கான ஒல்லாந்து தூதுவர்கள் 3 பேரின் பெயர்களை குறிப்பிடுக
2) இரண்டாம் இராஜசிங்க மன்னன் ஒல்லாந்தர் உடன் நட்புறவாக செயற்பட்டதன் நோக்கங்கள் இரண்டைக் குறிப்பிடுக
3) 1638 ஆம் ஆண்டு உடன்படிக்கையின் முக்கிய விடயங்கள் இரண்டைக் குறிப்பிடுக.
4) இலங்கையில் ஒல்லாந்தர் ஆட்சியினால் ஏற்பட்ட விளைவுகளை மூன்று காரணிகளின் துணையுடன் விளக்குக.